உ

கணபதி துணை.

ஸ்ரீமகாலட்சுமிக்கும்-பார்வதிக்கும்

வாக்குவாதம்.

இஃது

திரு-சண்முகஐயரவர்களால்

பார்வையிடப்பட்டு,

தொண்டமண்டல துளுவ வேளாளகுல
திலகராகிய

ம-ா-ா-ஸ்ரீ. அணவை

சபாபதிமுதலியாரவர்க
ளால்

கல்விப்பிரவாக வச்சுக்கூடத்தில்
பதிக்கப்பட்டது.

உருத்திரோத்காரி௵ கார்த்திகைமீ.
சூளை, பாப்பையர்வீதி (௰௫) நம்பர்வீடு

உ

கடவுள் துணை.

ஸ்ரீமகாலட்சுமிக்கும், பார்வதிக்கும்

வாக்குவாதம்.

காப்பு.

(நேரிசைவெண்பா.)

திங்கட் சடையாருஞ் செந்திருமாலும் மகிழு *
மெங்களுமைசெந் திருசெய்யேசனுக்குச் சங்
சயமில்லாச், - சந்திரனைப்பற்றித்தனிக்கோட்டி
லேயிணைக்குந், கர்தாத்தின் கர்பகமே காப்பு.

[கண்ணிகள்.]

மண்ணெடுத்தடிப்பட்டு வாணிச்சிப்பிட்டு. *
வாங்கிவாங்கித்தின்றோடியுங்கள் சிவனார். (௧)
குன்றெடுத்துப்பால்தயிர் வெண்ணெய்த்திரு
டிக் - குந்திக்குந்தித்தின்றோடியுங்கள் பெரு
மாள், பார்த்தன் கையில் கொண்டிருந்தவில்லடி
ப்பட்டு - பையப்பையவிழித்தாரோடி யுங்கள் சி
வனார், வேர்க்கவிட வரலுடன் கட்டியிடைச்சி
வீம்புடனடிக்கநின்றாருங்கள் பெருமாள்.. (௪)
வேண்டுமென்றசோறு கறிமிக்கவிருக்க … *
விஷத்தைக்குடித்தாரோடியுங்கள் சிவனார். (௫)
மானமுடன் றின்னட்பட்டவஸ்திவிருக்க. *
மண்ணை வாரித்தின்றோடியுங்கள் பெருமாள் (
பசும்பொன் சரப்பளி பதக்கமிருக்கப்… *
பாம்பணிகளைத்தரித்தாருங்கள் சிவனார்… ௭)

ஸ்ரீமகாலட்சுமிக்கும்-பார்வதிக்கும் ௫

தோஷமில்லாமுத்துநவரத்நமிருக்க ... *
துளசித்தழையையணிந் தாருங்கள்பெருமாள்
காளியுடன்மிக்கமிக்கவாதுசள்பேசி ... *
காலைத்தூக்கியாடினாரோயுங்கள் சிவனார்... (௧)
நீளமுடன்காளிங்கமடுவிற்குதித்து... ... *
தின்றவன் மேலாடினாரோயுங்கள்பெருமாள்(௰
தந்தையெனவந்தபெருங்கங்கைநதியைத் *
தலைமீதில்வைத்தாரோடியுங்கள்சிவனார்... (௰௧
அந்தருமட்டுனைசகொண்டிலக்குமிதனை ... *
அன்பாகச்சுமந்தாரடியுங்கள்பெருமாள் (௰௨
சேமக்கலங்கொட்டிக்கொட்டிப் பிச்சையெ
டுக்குஞ், சிற்றுண்டிப்பையனேடி யுங்கள்சிவ
னார், ஏமத்திலுஞ் சாமத்திலுந் தப்புகொட்டி
யே, இரந்துண்ணுந்தாதனேடியுங்கள்பெரு
மாள், காடுதனிலே நுழைந்தெண்ணாயிரம்பெ
ண்கள், கற்பழித்தாரல்லவோடியுங்கள்சிவனார்
நாடறியப்பதினாயிரங்கோபிகைகளை ... *
நன்மையுடன் கர்ப்பழித்தாருங்கள் பெருமாள் (
அந்திசந்திபச்மாசூரனுக்குப்பயந்து... *
ஐவேலிச்சாயிலொளித்தாருங்கள்சிவனார்.(௰௩
தந்தவக்கிரன்றாரத்தைமேவாடிக்குலையிற் ... *
றுனுழைந்தவரல்லவோவுங்கள்பெருமாள். ()
வைத்தகொள்ளுப்பைவைச்சற்புல் லந்தனுமே
ருதை,வாகனமாயேறினாரோயுங்கள்சிவனார்௰௪
ரத்தைக்குத்தம்செருடனைவாகனமாக... *
நாளையமாயேறினாரோயுங்கள்பெருமாள் (௨௰);

ஆனைத்தோலும் புலித்தோலு மாலைமயோட்
டையும், அணிந்தவரல்லவோடியுங்கள்சிவனார்.
மானமுடன்சானகத்திற் சீதையுடனே... *
மரவுரிதரித்தாரோடியுங்கள் பெருமாள். (௨௨)
வீடுவாசல்இலையாமல்சுடுக்காட்டிலே... *
வீற்றிருந்தாரல்லவோடியுங்கள்சிவனார் (௨௩)
நாடுதேசம்வீடுவாசல்காடுகள்விட்டு, நடுக்கட
லிற்பள்ளிகொண்டாருங்கள்பெருமாள். (௨௪)
சந்தனங்கெந்தப்பொடிபுனுகுமிருக்கச்... *
சாம்பல்குழைத்துப்பூசினாருங்கள்சிவனார். ()
வந்திரத்திருவயிந்திரப்புரத்துவெண்... *
மண்குழைத்துப்பூசினாரோயுங்கள்பெருமாள்.
போடிபோடிபண்டாரமாய்வந்தேயொருநா
ள், பிள்ளைகறிசோறுதின்றாருங்கள்சிவனார் (௨௭
வாடிவாடியிடையனாய் வந்தேஒருநாள், மாட்
டுப்பொங்கல்சோறுதின்றாருங்கள்பெருமாள்
முன்னேமுன்னேயுங்கள்சிவனல்லகுலமோ-
மூங்கிலிலவதரித்தாருங்கள்சிவனார்... (௨௯)
என்னேடிசாடைகசூர்ப் பணகிநீபோடி ...*
யக்ஷிகுலத் தூணில்வந்தாருங்கள்பெருமாள். ()
மதுரையிலேயறுபத்துநாலுருவாகி ... *
வந்துவிளையாடினாரோயுங்கள்சிவனார்... (௩௧)
விதமுடனைபன்றிமீனுருவாகி, விளையாடுங்
கிருஷ்ணனல்லோவுங்கள்பெருமாள்... (௩௨)
குவலயத்திலேமுருகன்வள்ளியைக்கொண்டா
ல், குறக்குலமாகுமேடியுங்கள்சிவனார்... (௩௩

ஸ்ரீம சாலட்சுமிக்கும்பார்வதிக்கும்
ஆவலுடனேமாடுகன்றுகள்மேய்க்கும்... ✻
அந்தவிடைக்குலமேடியுங்கள்பெருமாள். ௫௪
நாடறியமூரறியுந்தாடகைபோடி... ... ✻
நல்லவரோகெட்டவரோவுங்கள்சிவனார் (௫௫)
சூடுவனான்றுடையிலேசித்ராங்கிபோடீ... ✻
திருடனல்லவோமிகவுமுங்கள்பெருமாள் ௫௬
பிருடமணைச்சும்மாடுடனேகூலியாளாகிப் ...✻
பிரம்பாலடிப்பட்டாரோடியுங்கள்சிவனார் (௫௭
மறுமம்வெளிவிடாதேயென்றேபிடைச்சி ✻
மத்தாலடிப்பட்டாரோடியுங்கள்பெருமாள். ()
தேருடனேயானைபரிபல்லக்கிருக்கத் ... ✻
திருட்டுமாடேறினாரோயுங்கள்சிவனார்... (௫௯)
அம்புவியில்வெய்யலிலேகம்டளிப்போர்த்தி
அந்தமாடுமேய்த்தாரோடியுங்கள்பெருமாள் (
பணமில்லாதநரியைப்பரியதாயாக்கிப் ...✻
பாண்டியனுக்கேகொடுத்தாருங்கள்சிவனார். ()
சிநமுள்ள துரியன் சபையிற் றுரோபதைக்கன்
று,செவ்வையுடன் றுயிலளித்தாருங்கள்பெரு
ஆவலாயுமையவளைத்தபசுக்கேவிட்டே [மாள்
அன்றுதனியேதிரிந்தாருங்கள்சிவனார். (௬௰)
இராவணனெடுத்துக்கொண்டுபோனசீதையை
நாடியச்சேர்த்தாரோடியுங்கள்பெருமாள் . ()
கட்டத்துணிகிடையாமற்காட்டில்கிடந்து ✻
கரியுரியைச்சுட்டினாரோயுங்கள்சிவனார். (௬௫)
வட்டமுலைகோபிகைகள்பிடவையையெல்லா
ம்,வாரிக்கொண்டோடினாரோயுங்கள்பெருமா

ன் தாய்தகப்பனண்ணன் றம்பியொருவருமில்
லாத்-தமியன் மூன்றுகண்ணனேடியுங்கள்சிவ
னூர்மாயமுடன் றாலையவெட்டிக்கொன்றுபோ
ட்டமாறிரண்டுகண்ணனேடியுங்கள்பெருமா
ளெடுத்துத்திருநீலகண்டன்மனையி... *[ன்
னுகந்துசோறுதின்றாரோடியுங்கள்சிவனூர்சகு
நாடுசோறுமாயர்பாடி வெண்ணெய்த்திருடி..
நன்றிபெறத்தின்றாரோடி யுங்கள்பெருமாள் ()
முன்பிறந்தமகனுக்குக்கலியாணஞ் செய்ய.*
முதலிலாமல் விழிக்கிறாருங்கள் சிவனூர்..(௫௧)
அன்புடன்யாலிலையின் மேற்பள்ளிகொண்டு,
யங்கமில்லாபிள்ளைபெற்றாருங்கள் பெருமான்
வித்துவாம்மலையிற்றினம்விறகுசுமந்து ....*
வீணைராகம்பாடினரோயுங்கள்சிவனூர்...(௫௩)
சத்துருவைச்செயிக்கவேபதினைலாம்போரில்
சங்கெடுத்தூதினரோயுங்கள்பெருமாள் (௫௪)
சாம்பலைக்குழைத்துக்கமெங்கும்பூசி....*
சரீரம்வெள்ளையானவர்தாமுங்கள்சிவனூர் (௫௫
சாம்புதடிதோளில்வைத்தயாடுகள்மேய்த்து
தன்மெய்சறுப்பானவர்தானுங்கள்பெருமாள்
அண்டையிலேமண்ணெடுத்துக்கூலியாளாகி.*
அமர்ந்தசொக்கநாதரோ டியுங்கள்சிவனூர் (௫௭
சண்டையிலேயர்ச்சுனன்றன்கூலியாளாகி *
சாரத்தியஞ்செய்தாரோடியுங்கள்பெருமாள் ()
பார்வதிக்கிடப்பாகந்தந்தபடியால்... ...*
பாதிபெண்ணுமாணுமானாருங்கள்சிவனூர். ()

ஸ்ரீமகாலட்சுமிக்கும்,பார்வதிக்கும் ஸ
ஆரணியிலேயொளிக்க வீசனாருந்தான், அப்
போதொரு பெண்ணாய்வந்தா ருங்கள்பெரு
மாள்-பார்குடமேனவேடனாகவோடியே வந்து
பன்றிக்கொம்பைமுறித்தாரோடியுங்கள்சிவனு
ஆங்காரமாய்க்கஞ்சன்முன்னனுப்பிய ... *
ஆனைக்கொம்பைமுறித்தாரோடி யுங்கள்பெரு
மாள். இங்கிதமாப்தில்லையிலேயாடெடுத்தவர் *
இல்லையென்றுமழுவெடுத்தாருங்கள் சிவனார் (
துங்கவாயர்பாடிபெண்கள் கண்டுபிடிக்க... *
தூதனென்றுசெய்யில் கையிட்டாருங்கள்பெ
ருமாள்- இட்டவந்துவர்ச்சுனனுங்கட்டிப்பிர
ட்ட, இமேழவிழ்ந்துதவித்தாரோடியுங்கள்சிவனு
கட்டுணிகுட்டுணியவன்றாகிப்போகி... [ர்
கால்சிவப்பவிழ்ந்தாரோயுங்கள் பெருமாள்காசு
எழுந்திருந்துமார்க்கண்டனுக்காகவந்து *
இயமனையுதைத்தாரோடியுங்கள் சிவனார் (௬௭)
அழுந்திக்கல்லாயிருந்த பெண்ணையுதைத்தே,
அன்றுமருதமரமுதைத்தாருங்கள்பெருமாள்
குடிமாறன்கொல்லையிலே விதைத்தவிதையை
க்கொண்டுவந்து சோறுசெய்தாருங்கள்சிவனு
இடிமழையிந்திரன்பெய்யமலையைக்கொடை
யாய்எடுத்துப்பொங்கல்சோறுதின்றாருங்கள்
[பெருமாள், (௬௮)
தங்கக்கிரீடம்பாலகையுமற்றுமிருக்கச் ... *
சடைவளர்த்துக்கட்டினாரோயுங்கள்சிவனார்தக
துங்கமணிதுராய்கள் பலவுமிருக்கச்... ... *

ூடிஞரோ ரயிலிறகையுங்கள் பெருமாள் (௭௬)
மாட்டுப்பாலைத்தான் குடித்திடையன் கையால்
மண்வெட்டியால்வெட்டுப்பட்டாருங்கள்சிவ
காட்டிலேகிடந்தலையும்பேய் முலைப்பாலைக். *
கண்ணைக்கண்ணையுண்டாரோடி யுங்கள்பெருமா
நக்கனென்றுபேர்படைத்து சுனையின்வாயில்
நாடிப்பூந்துக்கொண்டாரோடியுங்கள்சிவனார் (
தக்கவிருகண்ணில்லாத்ததிபாண்டன்வீட்டில்
சாலுக்குள்ளேபுகுந்தாரோடியுங்கள்பெருமாள்
பாசுபதம்வாங்கவந்தவர்ச்சுனனைமுன் … *
பார்த்தெறிந்தாராகாயத்திலுங்கள்சிவனார் … ()
காசினியில்கஞ்சனொருகாளையாய்வரக், காலைத்
தூக்கிவிளாம்பழமுதிர்த்தாருஙகள்பெருமாள்
திக்குபுகழ்நக்கனேடி யுஙகள்சிவனார்-திருவா
தினாயிலொருவாய்களி தின்றுருஙகள்சிவனார்
வக்காப்போலக்கத்துகிருயிரணியின் மார்பை
வகிர்ந்துதிரங்குடித்தாரோயுங்கள்பெருமாள் ()
பாரிலொருகுட்டிக்குமுலைப்பால் கொடுக்கப்
பன்றியாகவந்தாரோடியுங்கள்சிவனார் … (௮௧)
காரியமாய்ப்பூமியெல்லாமுக்கர்லைவுழக் … *
கர்ப்பன்றியானாரோடியுங்கள்பெருமாள் (௮௨)

வக்குவாதம்

முற்றுப்பெற்றது.